# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1703/46 - 2011 අප්‍රේල් 29 වැනි සිකුරාදා - 2011.04.29

*1703/46 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 3/2010*

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்**

3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ரோஹண ராஜபக்ஷ ஆகிய நான், மின்சக்தி மற்றும் மின்வலு என்ற விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், இக் கட்டளையின் மூலம் -

(1) மன்னார் வடிநிலத்தில் எண்ணெய்யையும் வாயுவையும் ஆய்ந்துதேடும் கருத்திட்டத்தை மேற்கூறப்பட்ட சட்டத்தின் நோக்கங்களுக்காக செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக இனம்காணும் அறிவிப்பு 2011, மாச்சு 1 ஆந் தேதி கொண்ட 1695/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது எனவும் ;

(2) மன்னார் வடிநிலத்தில் எண்ணெய்யையும் வாயுவையும் ஆய்ந்துதேடும் கருத்திட்டத்தை செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக வெளிப்படுத்துவதற்கு 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது எனவும் ;

(3) மேற்படி செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் "மன்னார் வடிநிலத்தில் எண்ணெய்யையும் வாயுவையும் ஆய்ந்து தேடுவதற்கான கருத்திட்டம் " என அழைக்கவும் அறியவும்படவேண்டும் என்பதுடன் கெய்ர்ன் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் கருத்திட்டக் கம்பனியாதல் வேண்டும் எனவும் ;

(4) மேற்கூறப்பட்ட "மன்னார் வடிநிலத்தில் எண்ணெய்யையும் வாயுவையும் ஆய்ந்து தேடுவதற்கான கருத்திட்டம்" இலங்கை அரசாங்கத்திற்கும் கருத்திட்டக் கம்பனிக்கும் இடையில் 2008, யூலை 7 ஆந் திகதி செய்து கொள்ளப்பட்ட பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறு ஆய்ந்துதேடும் செயற்பாடுகள் தொடங்க வேண்டும் எனவும் ; அத்துடன்

(5) இக்கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களிலிருந்து விலக்களிப்புகள் கருத்திட்டக் கம்பனிக்கு அல்லது 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்திற்குள் இக்கருத்திட்டத்திற்கென நியமிக்கப்பட்ட உப ஒப்பந்தக்காரர்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும் என்பதுடன் இந்த விலக்களிப்புகள் 2008, ஒற்றோபர் 16 ஆந் திகதி முதல் 2016, ஒற்றோபர் 15 ஆந் திகதி வரையிலான எட்டு (8) ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு செல்லுபடியாதல் வேண்டும் எனவும், மேற்படி எட்டு (8) ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி முடிவுறுவதன்மீது அப்போது நிலவும் வரிகள் ஏற்புடையனவாதல் வேண்டும் எனவும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

### அட்டவணை

### மன்னார் வடிநிலத்தில் எண்ணெயையும் வாயுவையும் ஆய்ந்து தேடுவதற்கு அளிக்கப்படவேண்டிய விலக்களிப்பு

1. 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்

   * கூட்டிணைப்பு வருமான வரிகள் ;

   * கம்பனி பிடித்துவைத்தல் வரியின் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும் :-

   (i) மூலதனச் செலவினத்திற்கு எடுக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் வட்டியின்மீது ;

   (ii) ஆலோசகர்களுக்கு தொழில்நுட்பக் கட்டணங்கள்.

2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம் (சேபெவ).

3. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்.

4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டம் (நிர்மாணத் தொழில் உத்தரவாத நிதிய விதிப்பனவு).

5. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.

6. 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதார சேவை விதிப்பனவுச் சட்டம்.

7. (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டம் - சுங்கத் தீர்வையிலிருந்தான விலக்களிப்பு, கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் கம்பனியின் அல்லது 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் வரைவிலக்கணத்தினுள் இக்கருத்திட்டத்திற்கென நியமிக்கப்பட்ட உப ஒப்பந்தக்காரர்களின் பெயரில் இறக்குமதி செய்யப்பட்ட எல்லா மூலதனப் பொருட்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும். இப்பொருட்கள் 2008, ஒற்றோபர் 16 ஆம் திகதியிலிருந்து தொடங்கும் 8 ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதியாகிய ஆய்ந்துதேடும் உரிமத்தின் செல்லுபடியாகும் காலப்பகுதியின்போது, கருத்திட்டத்தால் மேற்கொள்ளப்படவுள்ள ஆய்ந்து தேடும் நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படுவதற்கு முனைப்படுகின்றன என்பதுடன், கருத்திட்டத்தால் தேவைப்படுத்தப்பட்டவாறும் முதலீட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்டவாறும் உபகரணங்கள், பொறித்தொகுதி, பொருட்கள், வழங்கல்கள் அத்துடன் பயன்பாட்டுப் பொருட்கள் என்பவற்றையும் உள்ளடக்கும். ஆயின், மேற்படி உடன்படிக்கையில் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் கம்பனியால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

பசில் ரோஹண ராஜபக்ஷ,
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2011, ஏப்பிறல் 30.

5- 362

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.